REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 33630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu." A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 16உ செவ்வாய் (29—1—57) ★ ★ வெளியீடு: தை 17உ புதன் (30—1—57) [இதழ் 199

## 94 புதிய பஞ்சாயத்துக்கள்!

★

சென்னை, சன. 28—

கடந்த 1956 டிசம்பர் திங்களில் தமிழ் நாட்டில் 94 புதிய பஞ்சாயத்துக்கள் திறவப்பட்டன என்று தெரிய வருகிறது.

இதில் சேலம் மாவட்டத்தில் 45 பஞ்சாயத்துக்களும், தென்னார்காடு மாவட்டத்தில் 18 பஞ்சாயத்துக்களும் திறவப்பட்டிருக்கின்றனவாம்!

# தி. மு. க. அபேட்சகர்கள்: மூன்றும் பட்டியல்

## சென்னை-திருவல்லிக்கேணி தொகுதியில் கா. அப்பாதுரையார் போட்டியிடுகிறார்

## நாஞ்சில் மனோகரன் நாகை மக்கள் சபைத் தொகுதிக்கு

திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களின் முதல் இரு பட்டியல்கள் கடந்த 19, 26-ந் தேதிகளில் வெளி வந்துள்ளன; மூன்றுவது பட்டியலை இன்று தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது:—

### சென்னை

திருவல்லிக்கேணி: பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்

தியாகராயநகர்: ஜேசுபாதம்

### தஞ்சை

காவாலிப்பட்டி: பி. எஸ். தங்கமுத்து

ஆடுதுறை: பெ. தருமன்

மன்னார்குடி: என். அருணசலம்

### கோவை

கோவை II (பொது): எஸ். ஏ. இராசமாணிக்கம்

சூலூர்: சண்முகசுந்தரம்

கூனூர்: ஒளியழகன்

### திருச்சி

பெரம்பலூர் (பொது): அரு. ஆதிமூலம்

### சேலம்

நாமக்கல் (தனி): மருதைவீரன்

### இராமநாதபுரம்

காரைக்குடி: இராம. சுப்பையா

### கன்னியாகுமரி

நாகர்கோயில்: எஸ். முத்துசாமி

குளச்சல்: எஸ். எம். எஸ். அமீது

கன்னியாகுமரி: எஸ். எம். குமாரசாமி

★

### மக்கள் சபை

அபேட்சகர்

நாகப்பட்டினம் (பொது): நாஞ்சில் மனோகரன்

## தேர்தல்களத்திலிருந்து மத்திய அமைச்சர் ஓட்டம்!

புதுடில்லி, சன 28—

பஞ்சாப் மாநிலத்திலிருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இராசகுமாரி அமிர்த கௌரி, தான் தேர்தலில் போட்டியிட இயலாது என்று காங்கிரஸ் மேலிடத்திற்கு அறிவித்துவிட்டார்களாம்.

## உண்ணு விரதத்தை நீடிக்க சங்கு-கணேசன் முடிவு

சென்னை, சன. 29—

சனவரி 17-ந் தேதியிலிருந்து 13 நாட்களாக உண்ணுவிரதம் இருந்துவரும் காங்கிரசுத் தியாகி சங்கு-கணேசன் அவர்கள், தொடர்ந்து உண்ணுவிரதத்தை மேற்கொளுவார் என்று தெரிய வருகிறது.

உண்ணுவிரதத்தைக் கைவிட பலர் கோரியும் அவர், தனது கோரிக்கைகள் ஈடேறினால் தான் உண்ணுவிரதத்தைக் கைவிட முடியும் என்றும், இன்றேல் முடியாதெனவும் கூறி மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

சர்க்கார், தனது கோரிக்கைகள் பற்றி திட்டவட்டமான உறுதி மொழி தந்தாலன்றி உண்ணுவிரதத்தைக் கைவிடுவதற்கில்லை என்றும் சங்கு-கணேசன் கூறியிருக்கிறார்.

பலவீனம்

சங்கு-கணேசன், மிகவும் பலவீனமாகக் காணப்படுகிறார்.

## இரயில்வே நிலைய அதிகாரிகள்

பிப்ரவரி முதல் தேதியன்று 'சம்பளம் வாங்கா' போராட்டம்

இரயில்வே நிலைய அதிகாரிகள் (ஸ்டேஷன் மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன் மாஸ்டர்கள் முதலியோர்) தங்களது குறைகளை இரயில்வே இலாகாவினரும் சர்க்காரும் உணருவதற்காக, வரும் பிப்ரவரி முதல் தேதியன்று சம்பளம் வாங்குவதில்லை என்று ஏற்கனவே செய்த முடிவை எல்லோரும் அமுல் செய்யவேண்டுமென தென்பகுதி இரயில்வேயின் சென்னைப் பிரிவு இரயில்வே நிலைய அதிகாரிகள் நேற்று மாலை கூடி முடிவு செய்திருக்கின்றனர்.

கோடம்பாக்கம் இரயில் நிலைய அதிகாரி தலைமையில் குரோம்பேட்டையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் 80-க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கின்றனர்.

## காங்கிரசே நாட்டுக்கு நலம் செய்யுமாம்!

தேர்தல் காலக் காங்கிரஸ்காரரான விநாயகம் கூற்று

காங்கிரசினால் மட்டுமே நாட்டுக்கு நலம்தேட முடியுமாம்!

உதாரணம் வேண்டுமானால், காங்கிரஸ்தான் ஒரு குடியரசுக்கான அரசியல் சட்டம் கொண்டுவந்ததாம்!

"அந்தச் சட்டத்தினால்தான் காங்கிரசின் கடுமையான எதிரிகள் கூட ஜனநாயக ரீதியாக இயங்கவும், வளரவும் முடியும்"

என்று தியாகராயநகர் தொகுதி காங்கிரஸ் அபேட்சகரான சே. விநாயகம் எம்.எல்.ஏ., சென்னை கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

## இந்தியைப் புகுத்த இன்னொரு முயற்சி

மத்தியக் கல்வி இலாகாவின் தீவிரத் திட்டம்

இந்தி பேசப்படாத மாநிலங்களில் இந்தி பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கு ஒரே அளவிலமையானத் தகுந்த 2,000 வார்த்தைகள் அடங்கிய ஒரு அகராதியை மத்திய அரசாங்கக் கல்வி இலாகா தயாரித்து சமீபத்தில் வெளியிட்டுள்ளதாம்.

## காலராவுக்கு 40 தொழிலாளர்கள் பலி!

காசி, சன. 27—

குனூர் அருகே ஒரு அணைக்கட்டு வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளரில் 40 பேர்களை பிரதேசத்தில் பரவிய காலரா கொள்ளை கொண்டுவிட்டதாம். இதைக் கண்டவுடன், அங்கு வேலைசெய்யும் 7,000 தொழிலாளரில் 5,000 தொழிலாளர்கள், பிரதேசத்திலிருந்து வெளியேறி விட்டனர் என்று தெரிய வருகிறது.

## ஆந்திரத்தில் அரும்பும் இன உணர்வு

### 'மொழிவேற்றுமைகளை மறந்து திராவிடமக்கள் ஒன்றுபட வேண்டும்'

ஆந்திர அமைச்சர் கோபால ரெட்டி கருத்து

மத்திய சர்க்கார் சபைகளில் தென்னாட்டு மக்களது 'செல்வாக்கினை' உணர்த்த, அவர்கள் தங்களிடை உள்ள மொழி வேறுபாடுகளையும் மறந்து ஒன்றுபட்டாக வேண்டும்.

"இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி தென்னாடு, வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வது முடியாது போய்விடும்.

"எனவே, தெலுங்கர்கள், தமிழர்கள், கன்னடர்கள், மலையாளிகள் ஆகிய தென்னாட்டவர், தங்களிடையே உள்ள சச்சரவுகளை விட்டொழிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"ஒரு மொழி பேசுபவர்கள், இதர (தென்னாட்டு) மொழிகளைக் கற்றுக்கொள்ள முயற்சிப்பதின்மூலம் இந்த ஒற்றுமை உருவாக வழிசெய்யலாம். பல்கலைக் கழகங்கள் இந்த முயற்சிக்கு வழி காட்ட முடியும்,"

என்று, ஆந்திரப் பிரதேச உள்நாட்டிலாகா மந்திரி பி. கோபால ரெட்டியார் அவர்கள், இங்குள்ள நிசாம் கல்லூரியில், உஸ்மானியா பல்கலைக் கழக ஆதரவில் நடைபெற்ற ஒரு கனடா விவாத அரங்கினைத் துவக்கிவைக்கும் போது குறிப்பிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# தமிழ்நாட்டில்

## புயலால் - - - அழிவு! அழுகுரல்!

## இரயில்விபத்தால் - பிணமலை! ரத்தவெள்ளம்!

ஆறுதல் அளிக்க நேருபண்டிதர் **வரவில்லை!**

ஓட்டுக் கேட்பதற்கு மட்டும் ஓடோடி **வருகிறார்!!**

★

நல்லோரே கூறுங்கள்

# நீதி இதுதானா?

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29-1-'57 செவ்வாய்


# தூற்றலைத் துவங்கிவிட்டார்கள்!

சில திங்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த பொதுத் தேர்தல் வந்தேவிட்டது. முடிவாகத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் முழு விவரமும் மேலும் ஒரு கிழமைக்குள் தெளிவாகத் தெரிந்துவிடும்.

இதற்கிடையில், தேர்தலில் கலந்துகொள்ளும் கட்சிகளும் தனி நபர்களும், தத்தம் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கிவிட்டார்கள். இனி ஒரு திங்களவரையில் தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சார முழக்கமாகவே இருக்கப்போகிறது.

கூடுமானவரை தேர்தல் பிரச்சாரம், பொதுவாகக் கொள்கை விளக்க அடிப்படையிலும் இலட்சிய விளக்கக் கண்ணோட்டத்திலும் இருக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். அதுதான் அரசியல் பொதுவாழ்வை புனிதமானதும் வளமுள்ளதுமான கடைக்காலின் மீது கட்டுவதற்குப் பயன்படுவதாக அமையவும் கூடும்.

இப்பிரச்சார இலட்சிய அடிப்படையிலிருந்து அணுவளவேனும் வழிவிலகிச் செல்லாத வகைக்குத் தன்னைத்தானே தன்னிச்சையாகக் கட்டுப்படுத்திக்கொண்டு செயல்பட்டு வரும் தனிப்பெரும் தனிக் கழகமாக, இன்றைய அரசியல் உலகில் சிறந்த ஒளிவீசிவருவது நமது முன்னேற்றக் கழகந்தான் என்பதை நாயமனம் படைத்த மாற்றுக் கருத்தினரும் ஒப்புக்கொள்ள பின்வாங்கமாட்டார்கள். நமது முன்னேற்றக் கழகத்தின் வேகமான வளர்ச்சிக்கான அடிப்படை பலத்தில், மேற்குறித்த புனிதமான உயர்ந்த நடைமுறையும் ஒன்றாகும் என்பதை அனைவரும் அறிந்தே உள்ளனர்.

நமது கழகத்தின் வளர்ச்சி கண்டு அழுக்காறு கொண்டு, பொதுவாக நமது கழகத்தவர்களையும் குறிப்பாகச் சில முன்னணித் தலைவர்களையும் தூற்றிப் பேசுவதில் சுவைகாணும் ஒன்றே ஒன்றை மட்டுமே, தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள சிலரும், இந்த தேர்தல் தூற்றல் பிரச்சாரத்தைத் தீவிரமாகத் தொடங்கிவிட்டுள்ளனர். திருடனை விட்டுவிட்டு ஒப்பாரிவைத்து அழுப் பழகி இருப்பவர்கள் இழவு வீட்டில் பிணத்தைக் கண் முன்னால் காணும்பொழுது, வாய்மூடியா இருப்பார்கள்? வாயில் போடத் தந்ததைக்கூட தங்கள் வாயில் போட்டு மென்று சுவைத்து நம கழகத்தவர்மீது காறி உமிழத்தான் செய்வர். அவர்கள் செயலால் பொதுவாழ்க்கை எவ்வளவுதான் மாசுபடர்ந்த போதிலும், அச்செயலிலிருந்துதான் நமது கழகத்தின் நேர்மையும் கண்ணியமும் பொது மக்களால் புரிந்துகொள்ளப்பட்டு வந்து இருக்கிறது என்ற மகத்தான உண்மையை நாம் அறிந்திருப்பதால், இந்தத் தேர்தல் நேரத்திலும் அன்னாரின் தற்கொலை தூற்றல் பேச்சுக்கு நாமோ, நமது கழகக் கர்மவீரர்களோ தூசு அளவும் மதிப்பு வைக்கப் போவதில்லை. நிற்க,

ஆளும் காங்கிரசுக் கட்சி ஒன்றை மட்டுமேதான், நமது முன்னேற்றக் கழகம் இத்தேர்தலில் எதிர்த்துப் போட்டியிடுகிறது. இதுதான் தேவையும், அரசியல் நியாயமும் ஆகும்.

மக்களாட்சி முறையில் திரிகரண சுத்தியான நம்பிக்கை கொண்டு செயல்பட்டுவரும் நமது முன்னேற்றக் கழகம், தேர்தலில் கலந்துகொள்வதைத் தான் நிறைவேற்றித் தீரவேண்டிய சனநாயகக் கடமைகளுள் ஒன்றெனக் கொண்டே, தேர்தலில் கலந்துகொள்ளுகிறது என்பதை ஏற்கனவே கழகம் ஒளிவு மறைவு துளியும் இன்றி விளக்கமாகக் கூறியுள்ளது. அறநெறியுடன் கலந்த அரசியல் நடைமுறைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கும் அரசியல் கட்சி எதுவானாலும், அக்கட்சி, நமது கழகத்தின் தேர்தல் ஈடுபாட்டின் உள்ளடக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் இருக்க நியாயமில்லை.

இவ்வுண்மையைத் தெரிந்திருந்துங்கூட ஒன்றுமே தெரியாதவர்கள்போல் நடித்து, காங்கிரஸ் கட்சியை எதிர்த்து முறியடிக்கத் தேர்தல் களம் புகுந்துள்ள மாற்றுக் கட்சியினர் சிலரும், நம கழகத்தவர் மீது, அரசியல் அரிப்புடன் தூற்றல் பாணத்தைத்தொடுக்க முனைந்துள்ளனர். அவர்கள் செயல் மூலம், அவர்களும் வீழ்த்தப்படவேண்டும் எனக் கூறிக்கொள்ளப்படும் காங்கிரஸ் கட்சி, மீண்டும் அரசு கட்டிலேறும் வாய்ப்பைப் பெறப்போகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. இந்த முடிந்த உண்மையை, அவர்கள் நம்மைப் பழித்துப் பேசுவதினால் மறைத்துவிட முடியாது என்பதைப் பொதுமக்கள் தெளிவாகத் தெரிந்தே இருக்கிறார்கள். நிற்க,

அடுத்து, ஆளும் கட்சியினர் எந்த அளவு தேர்தலில் அறநெறியைக் கடைப்பிடித்து பிரசாரம் செய்துவருகின்றனர் என்பதைப் பார்ப்போம். அதுபற்றி, நாம எழுதிக்காட்டித்தான் தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் பொதுமக்கள் இல்லை.

காங்கிரசுக் கட்சியினர், தேர்தலில் கலந்துகொள்ளும் எதிர்க்கட்சி அபேட்சகர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசக்கூடாது என்பதற்குச் சிறப்பளித்து, கராச்சி தீர்மானம் போன்றதோர் தேர்தல் பிரச்சார இலட்சியத் தீர்மானம் ஒன்றை, மிகமிகப் புதுமையாக இந்தூர் காங்கிரசு நிறைவேற்றி வைத்திருக்கிறது. அப்படி தீர்மானம் நிறைவேற்றிய பிறகுங்கூட, எதிர்க்கட்சியினரைத் தனித்த முறையில் தூற்றித்திரியும் காங்கிரசுத் தலைவர்களினுடைய இயல்பு, இன்றும் மாற்றமடைந்திருப்பதாகக் காணோம்.

இந்தூர் தேர்தல் பிரச்சார இலட்சியத் தீர்மானத்தை, தனது ஏசல் நடைமுறைக்கு ஒரு பகட்டான பட்டுத்திரை என்ற கருத்தில், பொதுவாகக் காங்கிரசு அமைச்சர்களும் குறிப்பாக இரயில்வே துணை அமைச்சர் ஒழலூர் அழகேசனாரும் எண்ணிவிட்டனர் போல் தெரிகிறது. அதுபற்றி நாளை விளக்கமாக எழுதுவோம். இந்தூர் தேர்தல் பிரச்சார இலட்சியத் தீர்மானத்தை அமைச்சர் அழகேசனாருக்கு நினைவுபடுத்துவதுடன் இன்று நிறுத்துகிறோம்.

### தீர்மானம் :

'பொது வாழ்க்கையில் மட்டுமின்றி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் உயர்ந்த தரம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும், அறநெறி சிறப்பு குறித்தும் காங்கிரசுத் தேர்தல் அறிக்கை குறிப்பாக நினைவூட்டியிருக்கிறது. எனவே, காங்கிரசார் தேர்தல் பிரச்சாரத்தைத் தரம் குறையாமல் நடத்த வேண்டும்; கசப்பை வளர்க்கக் கூடிய தனிப்பட்டவர்களைத் தாக்கும் இழிமுறைகளை விட்டொழித்துத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமெனக் கோரப்படுகிறார்கள்.

"தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறபடி காங்கிரசின் நோக்கங்கள், கொள்கைகள், திட்டங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டே தேர்தல் இயக்கம் நடத்தவேண்டும்.

"விரிவான சனநாயகத் தேர்தல் நடத்துவதின் நோக்கம், தனிப்பட்ட அபேட்சகர்கள் வெற்றி பெறுவது என்பது மட்டுமல்ல; பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதும் நோக்கமாகும்.

"இந்தியாவில், வயதுவந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை இருப்பதால், ஒரு பொதுத் தேர்தல், மக்களை அணுகி, சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பிரச்சினைகளையும் கொள்கைகளையும், இலட்சியங்களையும் விளக்கும் ஒரு இயக்கம் நடத்த அரிய ஒரு வாய்ப்பு அளிக்கிறது.

"ஐந்த விவகாரங்களும், சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் சர்க்கார்களின் சாதனைகளும் தான் மக்களிடத்தில் வலியுறுத்திக் கூறப்பட வேண்டியவையாகும்.

"ஒவ்வொரு காங்கிரசாரும் நல்லொழுக்கத்திற்கு ஒரு உயரிய எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டு தரம் குறையாமல், எதிர்த்து நிற்கும் அபேட்சகர்களைத் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்திப் பேசாமல், இந்தப் பிரச்சாரத்தைச் செய்யவேண்டும்."

---

### லாகூரில் விமானத் தாக்குதல் ஒத்திகை

லாகூர், சன. 27—

லாகூரில் முக்கிய கடைத்தெரு பகுதியான அனார்கலியில் நேற்று இரவு பாதுகாப்பு இலாகாவின் விமானத் தாக்குதல் ஒத்திகை நடைபெற்றது. அந்தப் பகுதியில் ஒளி விளக்குகள் எதும் இல்லாது இருள் சூழச் செய்யப்பட்டதாம்.

---

முன்னாள் காங்கிரஸ் தலைவர் தாண்டன், அலகாபாத் தொகுதியில் அபேட்சகராகப் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர் போட்டியிட முடியாது என்று மேலிடத்திற்கு அறிவித்துவிட்டாராம்.

---

# சேலத்தில் கைநெசவுத் தொழிலுக்குப் பேராபத்து

## ரூ. 25-இலட்சம் கைத்தறி ஆடைகள் தேக்கம்

### மாஸ்டர் வீவர்கள் உற்பத்தியைக் குறைக்கின்றனர்

## நெசவாளர்களிடை வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது

சேலம், சன 25—

இன்று மாலை 4 மணிக்கு சேலம் கோயமுத்தூர் லாட்ஜ் கார்த்திகேதனில், சென்னை மாநிலக் கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் செயலாளர் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டைக்கூட்டி, கீழ்க்கண்ட செய்தியை அறிவித்துள்ளார்:—

"சுமார் 4 மாதங்களாகச் சேலத்தில், மாஸ்டர் வீவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள சுமார் ரூ. 25 இலட்சம் பெறுமானமுள்ள துணிகள் தேங்கியிருக்கின்றன. வருகின்ற பொதுத் தேர்தலையொட்டி, மேலும் இரண்டு மாத காலத்திற்கு கைத்தறி துணிகள் விற்பனையாகும் என எதிர்பார்க்கவும் முடியவில்லை. இதனால் குறைந்த தறிகளை வைத்துக்கொண்டிருக்கும் மாஸ்டர் வீவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, தயாரிப்பை குறைத்துக் கொண்டதின் விளைவாக, நெசவாளர்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை இன்னும் நீடித்துக்கொண்டே போனால், வேலையில்லாத திண்டாட்டம் இன்னும் அதிகமாகப் பெருகும்.

"சேலத்தில் ஐந்தில் ஒரு பங்கு தறிகள்தான் சொஸைடியை நம்பிக்கொண்டிருக்கின்றன. மீதி தறிகள் அனைத்தும் மாஸ்டர் வீவர்களை நம்பி இருந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் இந்த நிலையைச் சமாளிக்க வேண்டுமானால் சர்க்காரிடம் தேங்கியிருக்கும் 'செஸ்' நிதியிலிருந்து சேலத்திலுள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்தாகவேண்டும். இது சம்பந்தமாக மேற்படி நெசவாளர் காங்கிரசின் செயலாளர் ஏ. சித்தையன் அவர்களும் தலைவர் டி. எல். கோபால்சாமி அவர்களும், கைத்தறிக் குழு டைரக்டரைச் சந்தித்து, இதற்கொரு பரிகாரம் தேடும் வகையில் ஒரு 'சொஸைடி' ஏற்படுத்தி அதன் மூலம் (ஐம்பது தறிகளுட்பட்டவர்களை) கைத்தறித் துணிகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டனர். அதற்கு டைரக்டர் அவர்கள், இதுபற்றி மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாகவும், பதில் கிடைத்ததும் ஆவன செய்வதாகவும் தெரிவித்தாராம்.

"இந்நிலையில் நூல் விலை ஏற்றமாகவும், அதே நேரத்தில் துணி விலை உயராமலும் இருந்துகொண்டிருக்கிறது. நார்பட்டு விலையும் ஏறியிருக்கிறது; துணி விலை ஏறவில்லை. இந்தக் காரணங்களால் மாஸ்டர் வீவர்கள் பெரிய தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மாஸ்டர் வீவர்களுக்குத் தேவைப்படும் நூல் ரகங்களை, சாயத் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் கூடுமானவரையில் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். துணி தேக்கத்தால் அவ்வப்போது மாஸ்டர் வீவர்கள் பணம் கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இந்த நிலை மாற, சர்க்கார் மேற்குறிப்பிட்டப் பரிகாரத்தை உடனடியாகச் செய்து, சேலத்தில் தேங்கியுள்ள துணிகளில் மூன்றில் ஒரு பங்கினையேனும் கொள்முதல் செய்து நெசவாளர்களின் துயரத்தைப் போக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்" (ந. - நி.)

---

# 'தாய் நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயரிடுக'

## 'சங்கு கணேசன் உயிரைக் காப்பாற்றுக'

### சென்னை ஆட்சியாளருக்கு பர்மா வாழ் தமிழ் இளைஞர்கள் வேண்டுகோள்

இரங்கூன், சன. 28—

இந்த நாட்டிற்கு மொழியின் அடிப்படையில் 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு கேட்டுக்கொண்டு பல திறப்பட்ட கட்சியினர், தனிப்பட்டோர், ஆட்சி மன்றங்கள், நிறுவனங்கள் அனைத்தும் தீர்மானங்கள் மூலம் சர்க்காருக்குப் பலமுறை கோரிக்கைகள் விடுத்திருக்கின்றன.

இப்போது, இங்குள்ளவர்கள் மட்டுமே இந்தக் கோரிக்கையை எழுப்பாமல், வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் தமிழக மக்களும் இக்கோரிக்கையினை வற்புறுத்தி வருகின்றனர்.

"நமது நாட்டிற்கு இன்னும் 'தமிழ் நாடு' என்று பெயரிடாத ஆட்சியாளரின் செயலைக் கண்டிப்பதுடன், உண்ணாநோன்பை மேற்கொண்டிருக்கிற சங்கு கணேசன் உயிரைக் காப்பாற்றுவதற்காகவாவது உடனே சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறோம்."

மேற்கண்ட தீர்மானம், கடந்த 20-ந் தேதியன்று, பர்மா—இரங்கூனில் உள்ள பர்மா இளந் தமிழர் முன்னணி இயக்கச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழா, இயக்கத் திறப்பு விழாக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேற்படி இயக்கத் தலைவர் தோழர் ப. இளமாறன் முன்மொழிந்த இத்தீர்மானத்தை, பர்மாவிலிருந்து வெளிவரும் இளைஞர் ஏடான 'தந்தி' இதழின் ஆசிரியர் திரு. வா. த. சாம்பசிவம் ஆதரித்து, ஆட்சியாளரின் எதேச்சாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். (ந.-நி.)

---

### தென் பகுதி மாநிலங்களின்

# அரசாங்க ஊழியர்கள் 'உரிமை'க் குரல்

மதுரை, சன. 26—

தென்னிந்திய மாநிலங்களில் உள்ள அரசாங்க பதிவில்லாத ஊழியர்களின் தனி மாநாடு ஒன்று இன்று இங்கு நடைபெற்றது.

மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியமும், பஞ்சப்படியும் தென் மாநில அரசாங்க பதிவில்லாத ஊழியர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்றும், அடுத்த ஊதிய நிர்ணயக் குழுவை நியமிக்கும் வரை அந்த முறை அமுலில் இருக்கவேண்டும் என்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

# ‘இன்று நாம் உற்சாகத்தோடு கொண்டாடிடும் பொங்கல் நாள்’

## ‘ஒரு காலத்தில் தேடுவாரற்றுக் கிடந்தது’

### ‘நாம்தான் நிலையை மாற்றியமைத்தோம்’

சென்னை ஐக்கிய வாலிபர் சங்க ஆண்டு விழாவில் என். வி. நடராசன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி கருத்துரை

சென்னை — கொடைடித்தோப்பு ஐக்கிய வாலிபர்சங்கத்தின் 11-வது ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் 27—1—57 மாலை 5-30 - மணி அளவில் தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. மா. கி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் சார்பாக நடத்தும் ‘இரவுப் பள்ளி’ மாணவர்களில் கல்வி, தேகப்பயிற்சி முதலியவற்றில் தேர்ச்சி பெற்ற 115 மாணவ மாணவிகளுக்கு தலைவர் அவர்கள் பரிசுகள் வழங்கினர்.

செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் மாணவத் தோழர்கள் யாதவராவ் மகாலிங்கம் மாணவி செயா ஆகியோர் சிறிதுநேரம் பேசிய பின்னர் தோழர்கள் இன்மொழியன் ஆர் ஜார்ஜ் ஆகியோர் சங்கத்தின் நோக்கம் பற்றியும் திராவிடர் திருநாள் பற்றியும் பேசினர்.

பின்னர், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும் சிறப்புரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

★

## என். வி. நடராசன்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது :—

“இந்த ஆண்டு திராவிடர் திருநாளை எந்த அளவு மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோமோ அதைவிட அதிக அளவிலே அடுத்த ஆண்டுக் கொண்டாட—இந்த ஆண்டிலே எந்த அளவு தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு வெளிப்படையான அளவில் மட்டுமே மகிழ்ச்சியைக் காட்டுகிறோமோ அந்த நிலை மாற்றப்பட்டு, தொல்லைகள் தடைக்கப்பட்டு, உண்மையாக—என்றுமே நிலைக்கும்படியான மகிழ்ச்சித் திருநாளாக அடுத்த ஆண்டு திராவிடர் திருநாளைக் கொண்டாட முயலுவோம்.

“இந்த சங்கத்தின் செயலாளர் ஆண்டறிக்கை வாசிக்கும்போது, வரவு-செலவுகளைக் கூறி, மீதத் தொகையுடன் கணக்குக் காட்டியிருக்கிறார். சராசரியான இந்தத் தோழர்கள் நடத்தும் இச்சிறிய சங்கத்தின் வரவு-செலவு கணக்கு மீதத் தொகையுடன் காட்டப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நமது ஆளவந்தார்களும்தான் ஆண்டுதோறும் கணக்குக் காட்டுகிறார்கள்—ரூ 4 கோடி வருடத்தில் வரவு வந்தால், ரூ. 5 கோடி அதிகச் செலவு—ரூ. 6 கோடி கடன் என்று!

“சாமானியர்கள் நடத்தும் சங்கத்தின் கணக்கிலே மிச்சம் காட்டமுடிகிறது; ஆனால் பெரிய மனிதர்கள் நடத்தும் சர்க்கார், கடனைத்தான் காட்டுகிறது!

“ஒரு காலத்தில் இந்தத் தமிழர் விழா தமிழர்களது சொந்த விழாவாக இல்லாது, ஆரியத்திற்கு அடிபணிந்து தேடுவாரற்றுக்கிடந்தது அதைச் சுயமரியாதை இயக்கத்தவர்களாகிய நாம், தமிழர் திருநாளாக மாற்றியமைத்து மகிழ்வோடு கொண்டாடுகிறோம். இந்த நேரத்தில் எத்தனை சோர்தளிப்புகள், எத்தனை சோகச் செய்திகள் இருந்தபோதிலும், அவைகளையெல்லாம் கணநேரம் மறந்து, தமிழர் திருநாளைத் தலை நிமிர்ந்து மகிழ்வோடு கொண்டாடுகிறோம்.

“இத்தகு நிலைமைகளை தேடித்தர உயிர்த்தியாகம் செய்த தோழர்களையும், நமது தமிழுக்காக உயிரைத்தந்த நம் அருமைத் தோழர்கள் தாளமுத்து — நடராசன்களையும் தமிழர் சமுதாயம் தழைக்க உயிரையும் வழங்கிய நம் அருமைத் தோழர்களையும்நம் நினைவுக்குக் கொண்டுவரத் தவறக்கூடாது.

“தமிழர் சமுதாயம் தழைக்க, தமிழகத்திலேயே அஸ்திவாரக்கல்லாக இருக்க இடம் இந்தப்பேட்டைதானே! 1936-ம் ஆண்டிலிருந்து தமிழர் தம் கிளர்ச்சியின்போது இந்த படவேட்டம்மன் தெருவிலே நடந்துபோன சம்பவங்கள் இன்றும் எடுத்துக்காட்டாக விளங்கிவருகின்றன. இதே தெருவிலேதான், இன்று ஐக்கிய வாலிபர் சங்கம் தனது கட்டுக்கோப்பான நிர்வாகிகளைக் கொண்டு தனது 11-வது ஆண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறது.

“நான் சென்ற நான்கைந்து நாட்களுக்கு முன்புதான் இந்த மன்றத்தை வந்து பார்வையிட்டேன்; பார்வையிட்டேன் என்றால், ‘ஏதோ தேர்தல் காலம்; ஆகவேதான்...’ என யாரும் எண்ணிவிடவேண்டாம். இந்த மன்றத்தார் ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததையொட்டித்தான் பார்வையிட்டேன். இவர்கள் இந்தப் பேட்டைவாசிகளுக்குத் தேவையான சுகாதாரம், கல்வி முதலிய பொதுப் பணிகள் அத்தனையிலும் ஈடுபட்டுப் பேருதவி புரிகிறார்கள் இந்தப் பேட்டையில் சிறுவர்களுக்காக இரவுப் பள்ளியொன்று வைத்து கல்விகற்றுத்தருகின்றனர். இத்தகைய சங்கத்தின் சார்பாகத் திராவிடர் திருநாளை, தமிழர் தம் சொந்த விழாவினை இங்கே இவ்வளவு அமைதியாக — மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம்!

‘நமக்கு முரண்பட்ட வேறு பல விழாக்களையும்தான் இந்த நாட்டில் கொண்டாடுகிறார்கள். எத்தனையோ அவலட்சணமான விழாக்களும் கொண்டாடப்படுகின்றன; அதுபோன்ற அவல நிலை ஒன்றுமில்லாது, அமைதியான முறையிலே எல்லா மதத்தவரும்கூட ஒருமித்துக் கொண்டாடும் பொது விழா இப்பொங்கல் விழா. இவ்விழாவினை, அடுத்த சுதந்திரத் தமிழகத்தின் பெருவிழாவாகக் கொண்டாட இந்த மன்றத்தார் பேருதவி புரிவார்கள் என்று நம்புகிறோம்!

“இந்தப் பேட்டையில் வளர்ந்துள்ள இந்த ஐக்கிய வாலிபர் சங்கம் மேலும் வளர்ந்து பெரும் பணியாற்றப் பெரிதும் விரும்புகிறேன்.”

★

## ஏ.வி.பி. ஆசைத்தம்பி

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதாவது :—

“நாம் இன்று கொண்டாடுகிற தமிழர்தம் திருநாளான பொங்கல் நன்னாள், ‘சங்கராந்தி’ என்ற பெயர் மாற்றப்பட்டு, உழைப்புக்கு மதிப்பளித்து, உண்மையான பெயரிட்டு ‘தமிழர் விழா’வாகக் கொண்டாடப்படுவதே நம்மால்தான் என்பதை மாற்றுக் கட்சியினரும் ஒப்புவர்.

“இன்றைக்கு நாட்டில் சுயமரியாதைத் திருமணங்கள் வெகுவாக நடந்துவருகின்றன; திருமணங்களிலே இருக்க வேண்டாத சடங்குகளை அகற்றித் திருத்திய திருமணமாக மாற்றியமைத்து நடைமுறைக்குக் கொண்டுவந்தவர்கள் நாம்தான்

“ஆனால் இன்று, எல்லாக் கட்சிக்காரர்களுமே அதனை ஏற்றுத் தங்களது கொள்கைகளுக்கேற்ப திருத்திய திருமணமாக நடத்தி வருவதைக் காண்கிறோம்.

“திராவிடர் திருநாளாகிய இந்தப் பொங்கல் நாளைக் கொண்டாடுவதே உதயசூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாதான்!

“காலையிலே உதயசூரியனைக் கண்டு, அவனுக்கு முன்னாலேயே நிலத்தை உழுது, விதைத்து, அவன் மூலமாகக் கிடைக்கும் மழையினால் வளர்ந்த பயிர்களை அறுவடை செய்து கொண்டாடும் இந்தப் பொங்கல் விழா, உதயசூரியனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் விழாவாகத்தான் இருக்கமுடியும்; இது அரசியல் கருத்தல்ல-உண்மையான கருத்து!

“இத்தகைய உண்மை யாவும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்துகளையுடைய இந்தப் பொங்கல் விழாவினைக் கொண்டாட இவ்வளவு சிறப்புற ஏற்பாடுகள் செய்துள்ள இந்த சங்க நிர்வாகிகளைப் பாராட்டுகிறேன்.

“இந்தச் சங்கத்தார், தங்கள் சங்கத்திற்கு ‘ஐக்கிய வாலிபர் சங்கம்,’ எனப் பெயரிட்டுள்ளதாக, இங்கு வாலிபர்கள் மட்டுமேதான் ஐக்கியமாக இருப்பர் எனப் பலர் எண்ணக்கூடும்; வயதாகிவிட்ட பெரியவர்களை ஐக்கியப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல; ஆகவே, எளிதில ஐக்கியப்படுத்த முடிந்த வாலிபர்களை இப்போது ஐக்கியப்படுத்திவிட்டால், அவர்கள் வயதான காலத்திலும் அவர்களது ஐக்கியம் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை

“மேலும் இந்தச் சங்கம், அறிவாதாரத்தை முக்கியக் குறிக்கோளாகக்கொண்டு பாடுபடுவது பாராட்டுதற்குரியது. எந்த ஒரு நாட்டிலும், அறிவாதாரம் சரிப்படுத்தப்பட்டால் மற்ற எல்லா நிலைகளும் சரிப்பட்டுவிடும்.

‘நம் நாட்டில் அறிவாதாரம் இல்லாததால்தான், ஒருவரை ஒருவர் சுரண்டுதல், ஏமாற்றுதல் போன்ற நிலைமைகள் இருந்து வருகின்றன.

“ஆகவே ஒரு நாட்டில் அறிவாதாரம் இருந்தால், சுகாதாரம் சரிவர இருக்க முடியும்; சுகாதாரம் இருந்தால் பொருளாதாரம் சரிப்படும்; பொருளாதாரம் சரிப்பட அரசியலாதாரம் சரிப்பட வேண்டும்!

“நமது நாட்டை எடுத்துக் கொண்டால், எந்த ‘ஆதார’மும் சரியாக இல்லை. இத்தகைய குறைகள் நீங்கி, அரசியலிலே விழிப்படைந்து ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’ என்ற இலட்சிய அடிப்படையில் நாடு முன்னேற இந்த ஐக்கிய வாலிபர் சங்கத்தாரும் இந்தப் பேட்டைவாசிகளும் பேருதவிபுரியப் பெரிதும் வேண்டுகிறேன்.”

---

### மூன்று வல்லரசுகள் மாநாடு நடைபெறும்?

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று மேலை வல்லரசுகளின் தலைவர்கள் மாநாடு ஒன்று விரைவில் வாஷிங்டனில் நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# சென்னை 14-வதுவட்ட தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புப் பொதுக்கூட்டம்

ஆயிரக்கணக்கான வியாபார, தொழிலாளர பொதுமக்களிடை க. அன்பழகன் தேர்தல் முழக்கம்

## தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு கிளைக் கழகம், வியாபாரிகள் சார்பில் நிதி

★

சென்னை, சன. 28—

சென்னையிலேயே மிகப் பெரும் அளவில் வியாபாரப்பெருங்குடி மக்களும், உழைப்பாளர் பெருமக்களும் வாழ்கின்ற கொத்தவால் சாவடிக்கருகில், சென்னை 14-வது வட்டத் தி. மு. கழகக் கிளையின் சார்பில், நேற்று மாலை ஓர் மாபெரும் பொதுக்கூட்டம்—தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்பு விழா நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் எ. செயராமன் முன்மொழிய, தோழர் இரா இராசமாணிக்கம் வழிமொழிய, தோழர் ஏ. டி. வேலு தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில், தோழர் வி. ஏ. சமத் இயக்கப்பாடல்கள் சில பாடினர்.

பின்னர், சென்னை 16-வது வட்டத்தைச் சேர்ந்த வள்ளுவர்-வாசுகி நூல் நிலைய உறுப்பினர் தோழர் வி. ஜி. கிருட்டிணன் அவர்களும், 14-வட்டத் தோழர் சீனிவாசன் அவர்களும் ‘சிலம்ப’ விளையாட்டுகள் செய்து காட்டி மகிழ்வித்தனர்

அடுத்து தோழர் பி.எம். கருணாகரன் அவர்கள் சிறிது நேரம் தெலுங்கு மொழியில், கழகக் கொள்கை, கோட்பாடுகள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

அதனையடுத்து தோழர் அறிவுடைநம்பி அவர்கள் சிறிது நேரம் பேசினர்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள் நீண்டநேரம் அரியதோர் உரை நிகழ்த்தினர். (அவரது சொற்பொழிவுச் சுருக்கம் பின்னர் வெளியிடப்படும்). தோழர் அன்பழகன் அவர்களது கருத்துரை, மாற்றாரின் ஏசல், தூற்றல் பாணங்களின் விளைவாக ஓரளவு மனமருட்சி பெற்றுள்ள சிலருக்கு மீண்டும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டத் தக்கதாக அமைந்திருந்தது

கூட்டத்தின்போது, 14-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் கிளைச் செயலாளர் தோழர் தி. ம. பாலகிருஷ்ணன், தேர்தல் நிதியாக ரூ. 101-ஐ அன்பழகன் அவர்களிடம் தந்தார். மற்றும், கிளைக் கழக முயற்சியால், கொத்தவால்சாவடி வாழை இலை கடைக்காரர்கள் ரூ. 101-12-0-ம், காய்கறி வியாபாரி தோழர் உத்தண்டி ரூ. 4-ம், கொத்தவால்சாவடி மளிகைக்கடை தோழர் டி. ஏ. அமீர்பாஷா ரூ. 25-ம், திருச்சி, பெரம்பலூர் வட்டம் மாத்தூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் ரூ. 9-6-3-ம், பஸ் ஸ்டாண்ட் மங்களா கேப் தொழிலாளர்கள் ரூ. 11-ம், ஆக மொத்தம் ரூ. 252-2-3 கொடுக்கப்பட்டது.

தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு, கிளைக் கழகச் சார்பிலும் கொத்தவால்சாவடி வாழை இலை வியாபாரிகள் சார்பிலும் பழனி உஸ்தால் தொழிலாளர்கள் சார்பிலும் மலர் மாலைகளும், திருச்சி மாவட்டம் மாத்தூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன.

தோழர் அறிவுடைநம்பி அவர்கட்கு, கொத்தவால்சாவடி வாழை இலை வியாபாரிகள், பழனி உஸ்தால் தொழிலாளர் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பொதுக்கூட்டம் நடைபெற்ற இடம் மிகக் குறுகலாகவும், வசதிக் குறைவாகவும் இருந்தபோதிலும் கூட, கூடியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களும் மிக ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இறுதிவரை கட்டுக்குலையாமல் அமர்ந்திருந்து கருத்து விளக்கம்பெற்றது கழகத் தோழர்களுக்கு மிக மிக நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது. (ந. - தி.)

# சென்னை-நுங்கம்பாக்கத்தில் மாபெரும் கழகப் பொதுக்கூட்டம்

34-வது வட்டக் கிளை ஆண்டு விழாவில் ஆசைத்தம்பி, என். ஜீவரத்தினம் இலட்சிய முழக்கம்

சென்னை, சன 27—

சென்னை—நுங்கம்பாக்கம் 34-வது வட்டக் கிளைக் கழகச் சார்பில், நேற்றுமாலை 6 மணியளவில் அப்பாசாமி முதலி தெருவில் கிளைக் கழக 7-வது ஆண்டுவிழாவும் டாக்டர் அம்பேத்கார் நினைவு மன்றத் துவக்க விழாவும் மிகச் சிறப்புற நடைபெற்றது.

வட்டக் கழகத் துணைச்செயலாளர் தோழர் சி. ஆர். கோலப்பன் முன்மொழிய, தோழர் எம் எஸ். இராமச்சந்திரன் வழிமொழிய தோழர் ஜே. எஸ். இராசன் தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இராசகோபாலும், சிறுவன் சுப்பிரமணியனும் தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் பாடினர் ‘நம் நாடு’ இதழில் வெளியிடப்பட்ட ‘ஆளை ஏய்க்கப்பாக்குறார்’ என்ற தேர்தல் பிரச்சாரப் பாடலை சிறுவன் சுப்பிரமணியன் மிக இனிமையாகப் பாடினது அனைவரையும் உற்சாகப்படுத்தியது.

பின்னர், தலைவர் சிறிதுநேரம் உரை நிகழ்த்தியதும், அடுத்துத் தோழர் சி. ஆர். கோலப்பன் கிளைக் கழக ஆண்டறிக்கையை வாசித்தார். அடுத்து, தோழர் ஏ. கே. சாமி டாக்டர் அம்பேத்கார் உருவப்படத்தைத் திறந்துவைத்து, டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கொள்கைகளையும், பணிகளையும், அவரது சீரிய செயல்முறைகளையும் எடுத்துரைத்தார்.

அடுத்து, தோழர் தி சு. கிள்ளிவளவன் அவர்கள், தி. மு. கழகத்தின் கடந்த கால அரசியல், சமுதாயப் பணிகளை விளக்கியும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட இன மக்களிடையே கழகம் மேற்கொண்டுவரும் ஆக்கவேலைகளையும் குறிப்பிட்டுப் பேசினர்.

பின்னர், தோழர் என். சீவரத்தினம் அவர்கள், மக்களின் மகத்தான வாக்குகளைப் பெற்று சட்ட மன்றம் சென்றவர்கள், சட்ட சபையில் தூங்கலாமா கூடாதா என்பது பற்றியப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள் தீட்டாத போக்கினைக் கண்டித்து, நாடு வாழவும், மக்கள் சுபிட்சமடையவும் கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழக நூற்றாண்டு விழா

## நகரில் கோலாகலமான காட்சிகள்

## பல்லாயிரம் மாணவர் பங்கு பெறுகின்றனர்

### மைசூர் கவர்னர் விழாவினைத் துவக்கி வைத்தார்

சென்னை, ஜன. 28—

சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா இன்று காலை வெகு கோலாகலமாகத் துவக்கப்பட்டது.

நூறு ஆண்டுகளாக வெகு சிறப்பான கல்விப் பணியாற்றி வந்திருக்கும் பல்கலைக் கழகம், அதன் சாதனைகளை நினைத்துப் பெருமைப்படுவதற்குரியதோர் வாய்ப்பாக இந்தப் பெருவிழா அமைந்திருக்கிறது.

விழாவினையொட்டி மாணவர் பல்லோர், தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து நகரில் குழுமியுள்ளனர்.

விழாவினை இன்று காலை, மைசூர் கவர்னர் சாமராச உடையார் துவக்கிவைத்து, மாணவர்களுக்குப் புகழுரையும், பல்கலைக் கழகத்திற்குப் பாராட்டும் வழங்கினார்.

இந்தியாவெங்கணுமுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகளும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றின் பிரதிநிதிகளும் விழாவில் பங்கு பெறுகின்றனர்.

### வரவேற்பு

'குடியரசு'த் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன், கவர்னர் ஜான், (பல்கலைக் கழக வேந்தர்) ஆகிய இருவரையும் விழாத் துவக்கத்தில், செனட் மண்டபத்தில், துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி, விழாக் குழுத் தலைவர் (நீதிபதி) இராசமன்னார் ஆகியோர் வரவேற்றிருக்கின்றனர்.

### அணிவகுப்பு

மாணவர் அணிவகுப்பு ஒன்றை மைசூர் கவர்னர் பார்வையிட்ட பின் அழகுற அலங்கரிக்கப்பட்ட மேடையில் அவரும், டாக்டர் இராதாகிருஷ்ணன், வேந்தர் முதலானோரும் அமர்ந்தனர்.

விழாக் குழுத் தலைவர் இராசமன்னார் வரவேற்புரைக்குப் பிறகு மைசூர் கவர்னர் விழாவினைத் துவக்கிவைத்துப் பேருரையாற்றினர்.

வேந்தருக்கு, துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், வந்திருந்த பிரதிநிதிகளை அறிமுகம் செய்துவைத்திருக்கிறார்.

பின்னர், கவர்னரும் வேந்தருமான ஏ. ஜே. ஜான் அவர்கள், இந்தப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா நடைபெறுகையில் அதன் துணைவேந்தராயிருப்பது பெரும் பெருமைக்குரியது' என்று கூறி, தான் இந்தப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவன் என்பதிலே மகிழ்ச்சியும் அடைவதாகக் குறிப்பிட்டு, கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

### கண்காட்சி

பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவையொட்டி பல்கலைக் கழக மானியக் கமிஷன் தலைவர் சி. டி. தேஷ்முக் சென்னை—கிண்டி பொறியியற்கல்லூரியில் ஒரு கண்காட்சியைத் திறந்துவைத்திருக்கிறார்.

நிதி மந்திரி சுப்பிரமணியம் நன்றி கூற காலை விழா அத்துடன் முடிவுற்றிருக்கிறது.

# சென்னைத் தோழர்கள் கவனிக்க:

வண்ணாரப்பேட்டை, பேசின் பிரிட்ஜ், எழும்பூர், ஆயிரம் விளக்கு, பெரம்பூர், திருவல்லிக்கேணி ஆகிய தொகுதிகளில் உள்ள வட்டங்களில் குறிப்பாகவும், மற்ற வட்டங்களில் பொதுவாகவும், எங்கெங்கு பொதுக்கூட்டங்கள் (தேர்தல் பிரச்சாரத்திற்காக) நடத்த வசதி (கூடுமானவரை போக்கு-வரத்துக்கு இடைஞ்சல் இன்றி) உள்ளது என்பதை, 30—1—57 புதன்கிழமை மாலை 8 மணிக்குள், தலைமை நிலையம் வந்து தெரிவிக்குமாறு கிளைக் கழக நிர்வாகிகள் கோரப்படுகிறார்கள். தவறாது தகவல் தரவேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****-**********-*-****

### சென்னை 4-வது வட்டத் தேர்தல் குழு அமைப்பு

29—1—57 இரவு 8 மணிக்கு, மணிக்கண்டமுதலி 6-வது தெரு, பாண்டியன் நிலையத்தில் வட்டத் தேர்தல் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். தொகுதி அபேட்சகர் தோழர் என். சிவராஜனம் கலந்துகொள்வார். கழகச் சார்புடைய மன்றங்கள் படிப்பகங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் முக்கியத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# வேண்டுகோள்:

★

தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். பி. வடிவேலு, எம். நடேசன் ஆகியோர் தங்கள் தேர்தல் அலுவலகத்தை வாணியம்பாடியிலேயே அமைத்துள்ளதால், கடிதம் எழுதும் தோழர்கள் 'எண் 32, மெயின்ரோடு, காதர் பேட்டை, வாணியம்பாடி' என்ற முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### சென்னை மாணவர் மன்றத் தமிழ்த் தேர்வு

2—2—57 சனிக்கிழமையன்று காலை 9 மணி முதல் மாலை 4½ மணி வரை சென்னை மாநிலமெங்கும், சென்னை மாணவர் மன்ற எஸ் எஸ் எல். சி. தமிழ்த் தேர்வு நடைபெறும்.

### கோவை 13வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

31—1—57 இரவு 8 மணியளவில், கிளைக் கழகப் பணிமனையில் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். தோழர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### சென்னை 25வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

30—1—57 மாலை 6 மணிக்கு புரசை, பெருமாள்நாய்க்கன் தெரு எண் 18, தோழர் துரையரசன் இல்லத்தில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தலில் தோழர்கள் கடமை தேர்தல் குழு அமைத்தல் ஆகியவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

# கழகக் கூட்டம்

★

**நல்லூர்:**

மந்தகரை மைதானத்தில்
31—1—57 மாலை 4 மணிக்கு
தலைவர்: பி. எஸ். கோதண்டம்
பேசுவோர்:
கி. மனோகரன்
சி. ஜம்பு
வேலாயுதம்
க. கோபாலகிருட்டிணன்

★

**சீர்காழி:**

தேர்தெற்கு வீதியில்
31—1—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: இரா. சண்முகம்
பேசுவோர்:
கி. மனோகரன்
சி. ஜம்பு
வேலாயுதம்
க. கோபாலகிருட்டிணன்

★

**லால்பேட்டை:**

தெக்குத்தோப்பு திடலில்
30—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கு. கோவிந்தராசு
பேசுவோர்:
இரே. இளம்வழுதி
ஆறுமுகம்
பொன. சொக்கலிங்கம்
எம். கே. நாராயணன்
சதாசிவம், சக்திமோகன்

★

**காளி:**

(மாயூரம் வட்டம்)
சிவன்கோயில் திடலில்
30—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கி. சத்தியசீலன்
பேசுவோர்:
கி. மனோகரன்
சி. கிருஷ்ணமூர்த்தி
என். கட்டப்பா
கே. பிச்சை
கே. எஸ். சௌந்தரராசன்

## 'நிலப்பிரபுக்களிடம் நியாயமாகவே நடந்துகொண்டிருக்கிறோம்'

### மந்திரி மாணிக்கவேலர் கூறுகிறார்

தஞ்சை, ஜன. 28—

'நிலப்பிரபுக்களுக்கு சர்க்கார் நியாயம் வழங்கியுள்ளனர்; நியாயவாரச் சட்டத்தில் நிலப்பிரபுக்களுக்கு 40 பங்கு தர சர்க்கார் சம்மதித்திருக்கிறது; ஆனால் திட்டக்குழுவோ, 30 பங்கு தந்தால்போதும்,' என்று தீர்ப்பளித்திருந்தது; எனவே சென்னை சர்க்கார், மிராசுதார்களுக்கு நியாயம் வழங்கத் தவறிவிட்டதாகக் கூறப்படுவது தவறு"

என்று மந்திரி மாணிக்கவேலர், மாத்தூர் கிராமத்தில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார்.

## ரஷ்யாவில் 5 புதிய அணு உலைகள்!

லண்டன், ஜன 28—

1958 முதல் 1960-ம் ஆண்டுக்குள் ரஷ்யாவில் சுமார் 5 அணுசக்தி உலைகள் நிறுவப்படும் என்றும், இவை ஒவ்வொன்றும் 4 முதல் 5 இலட்சம் கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

## 17 இலட்சம் ஏகருக்கு நீர்ப்பாசன வசதி

### ஆந்திராவில் திட்டம்

கர்னூல், ஜன. 28—

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நிசாமாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த பூசம்பாத் எனுமிடத்தில், கோதாவரி நதித் தண்ணீரை மடக்கி, நீர்ப்பாசனத்திற்குப் பயன்படச் செய்யும் திட்டம் தயாராகி வருகிறதாம்.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் நிசாமாபாத், மேடக், ஐதராபாத், கரீம்நகர், நல்கொண்டா, வாரங்கல் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 17 இலட்சம் ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும் என்று கூறப்படுகிறது.

1956—57-ம் ஆண்டில் இந்த திட்டத்தின் துவக்க வேலைகளுக்காகச் செலவிடுவதற்கென ஆந்திர சர்க்கார், ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள் என்று தெரிகிறது.

## இலட்சணமே இலட்சணம்!

குளக்குடி, ஜன. 29—

சென்ற ஆண்டு கிறிஸ்துமஸ், இந்தியப் பொங்கல் விழாக்களுக்கு சர்க்கார் அனுமதித்த முன்பணம் இதுவரையில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளக்குடி ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லையாம்!

கடந்த 19-ம் தேதியன்று இங்கு நடைபெற்ற வட்டார ஆரம்ப ஆசிரியர்கள் சங்கக் கூட்டம் ஒன்றில், மேற்படி தகவலைச் சுட்டிக்காட்டி, இதனை உடனடியாக சர்க்கார் கவனித்து ஆவன செய்யுமாறும், வருகிற பரீட்சை, ரம்சான் ஆகிய பண்டிகைகளுக்கு முன்னதாகவே முன்பணம் கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யுமாறும் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

*******-**-*******************-*********


# தி. மு. க.—தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாடு

## சென்னையில்

### பிப்ரவரி 10-ந்தேதி ஞாயிறன்று

நடைபெறும்

*

பொதுச்செயலாளர்

## இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவர்.

*

★ நாட்டுக்கு நல்லாட்சி
★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

## அண்ணா

| | |
|---|---|
| என். வி. நடராசன் | ஈ. வெ. கி. சம்பத் |
| மு. கருணாநிதி | சி. பி. சிற்றரசு |
| கே. ஏ. மதியழகன் | சத்தியவாணிமுத்து |
| க. அன்பழகன் | காஞ்சி—கல்யாணசுந்தரம் |
| ஏ. வி. பி. ஆசைத்தம்பி | நாஞ்சில் மனோகரன் |

ஆகியோரின் விளக்க உரைகள்

### இரவு 10-மணிக்கு--நாடகம் உண்டு

இடமும், மற்ற விவரங்களும் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)


***********************************

## சென்னை—நுங்கம்பாக்கத்தில்...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்னர், தோழர் வ. சங்கரநாராயணன் அவர்கள் பேசுகையில், 'இன்னும் காங்கிரஸ் ஆட்சியில் வாழ்ந்துகொண்டிருப்பதைவிட அணுகுண்டுக்கு இரையாகி உயிர்ப்பது மேல்' எனக் குறிப்பிட்டார்.

இறுதியில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், தி. மு. கழகத்தின் தூய நோக்கங்களை விளக்கியும், டாக்டர் அம்பேத்கார் கொள்கைக்கும் தி. மு. கழகக் கொள்கைக்குமுள்ள ஒருமைப்பாட்டினை எடுத்துக் கூறியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில், 34-வது வட்டக் கிளையின் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு முதல்முறையாக தோழர் ஆசைத்தம்பி அவர்களிடம் தோழர் ஆர். சம்பந்தம் ரூ. 51 அளித்தார்.

நுங்கம்பாக்கம் கிளைக் கழகத்திற்கு, டாக்டர் அம்பேத்கார் மன்றச் சார்பில் தோழர் மு. சு. மணி அவர்களால், டாக்டர் அம்பேத்கார் உருவப் படம் ஒன்று அன்பளிப்பாகத் தரப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி சொல்லுடன் கூட்டம் இரவு 9 மணியளவில் முடிவுற்றது. (பேச்சு விவரங்கள் பின்னர் வெளிவரும்) (ந. நி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அமிசி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.